குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.Sadhamhusain B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண். 69/2021

எ.ம.சா. 3

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 08–ம் தேதி வியாழக் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | குப்புசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.05 மணி,

Complainant Sakthivel present. Advocate Mr.P.Kathiravan present for Complainant. Accused Jayaraman present. Advocate Mr.Thailappan present for Accused.

**எதிரி தரப்பு முதல் விசாரணை:**

1) நான் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி, 5 ரோடு கிளையின் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.1 ஆவணத்தின் பின்பக்கம் 07.01.2020 தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா 5 ரோடு கிளையின் CTS clearing செய்ததற்கான முத்திரை உள்ளது என்றால் சரி. **மேற்படி முத்திரை எ.ம.சா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) ம.சா.1 ஆவணத்தில் 07.01.2021 தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா 5 ரோடு கிளையின் CTS clearing செய்ததற்கான முத்திரை உள்ளது என்றால் சரி. **மேற்படி முத்திரை எ.ம.சா.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2020 ம் ஆண்டு முத்திரை 2020 ம் ஆண்டு மட்டும் தான் செயல்பாட்டில் இருக்கும் என்றால் சரி, வழக்கு காசோலையில் 2021 க்கு பதிலாக 2020 என்று தவறுதலாக சீல் வைக்கப்பட்டதால் மறுபடியும் 2021 ம் ஆண்டுக்கு மற்றொரு சீல் வைக்கப்பட்டுள்ளது. வங்கியின் முத்திரையில் தேதி மாதம் மற்றும் வருடத்தை மாற்றுவதற்கு 3 சுற்று இருக்கும் அதில் தேதி மற்றும் மாதத்தை மட்டும் மாற்றிவிட்டு வருடத்தை 2021 என்று மாற்றுவதற்கு பதிலாக 2020 என்று தவறுதலாக வைக்கப்பட்டு இருக்கலாம். காசோலை 07 ம் தேதி தான் வசூலுக்கு செலுத்தப்பட்டது என்றால் 6 நாட்களும் வருடம் மாற்றப்படாமல் சீல் வைக்கப்பட்டதா என்றால் அந்த நாட்களில் காசோலைகள் வசூலுக்கு செலுத்தப்படாமல் இருந்திருக்கலாம்.

3) 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ம் தேதி வரை CTS clearing எங்கள் வங்கியால் செய்யப்பட்டடு இருக்குமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். இவ்வழக்கு காசோலைக்கு முன்பாக இதேபோல் 2021 ம் ஆண்டு பதிலாக 2020 என்று தவறுதலாக சீல் வைக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வாறு தவறுதலாக தேதி அல்லது வருடம் சீல் வைக்கப்பட்டால் வங்கியின் நடைமுறை என்னவென்றால் தவறுதலாக வைக்கப்பட்ட முத்திரையை அடித்து மேற்குறிப்பு செய்து சரியான தேதியில் முத்திரை வைக்கப்படும்.

4) ம.சா.1 ஆவணம் 2020 ம் ஆண்டு வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. 07.01.2020 ம் தேதி இவ்வழக்கு காசோலை வங்கியில் செலுத்தப்பட்டுள்ளதால் அந்த தேதியில் உள்ள முத்திரையை அடித்து மேற்குறிப்பு செய்யாமல் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 07.01.2020 ம் தேதி இவ்வழக்கு காசோலை வங்கியில் செலுத்தப்பட்ட போது வங்கியால் ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதா என்றால் அந்த தேதியில் காசோலை செலுத்தப்படவில்லை. 07.01.2021 ம் தேதி இவ்வழக்கு காசோலையில் வங்கியில் செலுத்தியதற்கான ஆவணம் உள்ளதா என்றால் புகார்தாரரின் 01.01.2021 முதல் 31.12.2021 தேதிக்கான வங்கிகணக்கு பட்டியில் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.மா.சா.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஆவணத்தில் 07.01.2021 ம் தேதி இவ்வழக்கு காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்டு 08.01.2021 ம் தேதி திருப்பப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கு காசோலை புகார்தாரரால் நேரடியாக எங்களது வங்கியில் வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை, வசூலக்கு செலுத்தப்பட்ட தேதியில் புகார்தாரரின் வங்கியான கார்பரேசன் வங்கி, செம்மாண்டப்பட்டி கிளை உட்படி பல்வேறு வங்கிகள் எங்களது வங்கியான யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியுடன் சேர்க்கப்பட்டதால் கார்பரேசன் வங்கியின் கிளையின் மூலம் காசோலை எங்களது வங்கிக்கு அனுப்பப்பட்டு வசூலுக்கு செலுத்தப்பட்டது. மேற்படி கார்பரேசன் வங்கி எந்த தேதியில் எங்கள் வங்கியுடன் சேர்க்கபட்டது என்றால் 2020 முடிவில் இருக்கும். மாதம் மற்றும் தேதி குறிப்பிட்டு ஞாபகம் இல்லை.

6) வங்கி சேர்ந்த பிறகு காசோலையின் தேதியில் இருந்து 90 நாட்கள் கழித்து வசூலுக்கு செலுத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாது. 07.01.2020 ம் தேதி கார்பரேசன் வங்கி யூனியன் வங்கியுடன் சேர்க்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலையில் 07.01.2020 என்று தவறுதலாக சீல் வைக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்வது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையில் பின்புறம் இருக்கும் செம்மாண்டப்பட்டி கிளையின் வங்கி முத்திரை எந்த தேதியில் வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரி. இவ்வழக்கு காசோலையின் திருப்பதல் மெமோ எங்களால் செம்மாண்டப்பட்டி கிளைக்கு கொடுக்கப்பட்டது. காசோலையில் தேவையற்ற திருத்தங்கள் செய்து மேற்குறிப்பு செய்யாமல் விட்டால் அந்த காசோலை ஏற்றுக் கொள்ளப்படாது என்றால் காசோலையின் முன்பக்கம் திருத்தங்கள் செய்தால் ஏற்றுக் கொள்ளப்படாது.

வாடிக்கையாளரின் வங்கி கணக்கு பட்டியலை எங்களது வசதிக்காக திருத்தங்கள் செய்யப்படுமா என்றால் இல்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

7) இவ்வழக்கு காசோலை ஜெயராமன் என்பவரின் வங்கி கணக்கிற்கான SBI வங்கி, ஸ்ரீரங்கபாளையம் கிளையின் காசோலை என்றால் சரி. மேற்படி காசோலை சக்திவேல் என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக எங்களது ஆவணங்களில் உள்ளது. மேற்படி காசோலை 07.01.2021 ம் தேதி செம்மாண்டபட்டி கிளை, யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளையில் செலுத்தப்பட்டு 08.01.2021 ம் தேதி Stop payment காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரி. 01.04.2020 ம் தேதி மத்திய அரசின் அரசிதழின் படி கார்பரேசன் வங்கி யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியுடன் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டது என்றால் சரி. அவ்வாறு இணைக்கப்பட்ட பின் செம்மாண்டபட்டி கிளையில் செலுத்தப்படும் காசோலைகள் CTS clearing வசதி இல்லாததால் 5 ரோடு கிளைக்கு அனுப்பப்படும் என்றால் சரி.

8) 01.04.2020 ம் தேதிக்கு முன்னிட்டு கார்பரேசன் வங்கிக்கும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரி. இவ்வழக்கு காசோலையின் பின்புறத்தில் 07.01.2020 என்று தேதியிட்ட முத்திரை பதிக்கப்பட்டுள்ளதாக காணப்பட்டாலும் அன்றைய தேதியில் செம்மாண்டபட்டி கிளையில் செலுத்தப்பட்டிருந்தால் காசோலை CTS clearing காக 5 ரோடு கிளைக்கு வந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரி. மேற்படி 07.01.2020 தேதியிட்ட முத்திரை தவறுதலாக வைக்கப்பட்டுள்ளது. மேற்படி 07.01.2020 ம் தேதியிட்ட முத்திரை தவறுதலாக வைக்கப்பட்டதற்கான ஆவணம் வங்கியில் இருந்து பெறப்பட்ட கடிதத்தை தாமாக எடுத்து வந்துள்ளேன் **அது நீ.சா.ஆ.1 ஆக எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்யேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**

9) இவ்வழக்கு காசோலை 07.01.2020 ம் தேதி எங்களது வங்கியில் செலுத்தப்பட்டு இருந்தால் எங்களுடைய வங்கி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் சரி. எங்களது வங்கி ஆவணங்களில் அதற்கான குறிப்புகள் ஏதும் இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 1.18 மணி,

Sd/ S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.